


32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 32 பாலம்: 20 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 15, 2022

# அல்பேட்டா மாகாணத்தில் புதிய முதல்வர்!

அல்பேட்டா மாகாணத்தின் புதிய முதல்வராக Danille Smith 2022 ஒக்ரோபர் 6ஆம் திகதி ஆளும் கட்சியான ஐக்கிய பழமைவாதக்கட்சி (UCP) உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டார்.

2019ஆம் ஆண்டில் நடைபெற்ற அல்பேட்டா மாகாண நாடாளுமன்றத் தேர்தலில் Jason Kenney வெற்றிபெற்று மேலதிக பெரும்பான்மையுடன் அல்பேட்டா மாகாணத்தில் 18ஆவது முதல் வராகப் பதவியேற்றார். அவர் கோவிட்-19 பெரும் தொற்று நோயைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் திருப்திகரமாக இல்லை என அவரது கட்சி உறுப்பினர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து அவரது கட்சித்தலைமையை உறுதி செய்யக் கட்சி உறுப் பினர்களிடம் 2022 மே 18இல் ஒரு தேர்தல் நடத்தப்பட்டது.

அத்தேர்தலில் 51.4% வாக்கு களைப் பெற்று அவரது கட்சித் தலைமைப் பொறுப்பு உறுதி செய்யப்பட்டாலும், தனது கட்சித் தலைமைக்குச் சார்பாக விழுந்த வாக்குகள் போதுமானது அல்ல எனக்கூறி Jason Kenney தனது கட்சித் தலைமைப் பதவி யையும், அல்பேட்டா மாகாண முதல்வர் பதவியையும் துறந்தார். ஆனாலும் ஒரு புதிய கட்சித் தலைவர் ஐக்கிய பழமைவாதக் கட்சிக்குத் தெரிவு செய்யப்படும்வரை தான் கட்சித்தலைவராகவும், அல்பேட்டா மாகாண முதல்வராகவும் இருப்பேன் எனக் கூறியிருந்தார்.

ஐக்கிய பழமைவாதக் கட்சியில் வாக்களிக்கும் உரிமையுடைய 124,000 பேர் உள்ளனர். அக்கட்சியின் தலைவர் தெரிவிற்கு வாக்களிக்கும் உரிமை உள்ள எல்லோருக்கும் ஆளுக்கு ஒரு வாக்கு உண்டு. அத்துடன் அவர்கள் கட்சித் தலைமைக்குப் போட்டியிடும் ஒன்றுக்கு மேற்பட்டோருக்குத் தமது விருப்பத்தைத் தெரிவிக்கும் முகமாக 1, 2, 3... என வாக்குச்சீட்டில் எழுதுவதன் மூலம் வாக்களிக்கலாம்.



எல்லா வாக்காளருடைய முதலாவது தெரிவு மட்டும் முதலில் எண்ணப்பட்டு அதில் 50%க்கும் மேற்பட்ட வாக்கு களைப் பெற்றவர் வென்றதாக அறிவிக் கப்படும். எவரும் 50%க்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறாவிட்டால் ஆகக் குறைந்த வீத வாக்குகளைப் பெற்றவரது பெயர் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகளில் உள்ள 2ஆவது விருப்பத்தைப் பெற்றவருக்கு அந்த வாக்குகள் அளிக்கப்பட்டு எண்ணப்படும். இவ்வாறே தொடர்ந்து குறைந்த வீத வாக்குகள் பெற்றவர் பெயர் நீக்கப்பட்டு ஒருவர் 50%இற்கு மேற்பட்ட வாக்குகள் பெறப்படும்வரை நடைபெறும்.

ஐக்கிய பழமைவாதக் கட்சித்தலைமைப் பதவிக்கு ஏழுபேர் போட்டியிட்டனர். அவர்கள் Leela Aheer, Brian Jean, Rajan Sawhney, Rebecca Schulz, Danielle Smith, Todd Loewen மற்றும் Travis Toews ஆவர். இவர்களில் Aheer, Schulz, Sawhney மற்றும் Toews ஆகிய நால்வரும் Jason Kenneyஇனுடைய அமைச்சரவையில் பதவி வகித்தவர்கள்.

Todd Loewen ஐக்கிய பழமைவாதக் கட்சியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவர் Jason Kenneyஇடைய கோவிட்-19 பெரும் தொற்றுநோய்த் தடுப்புமுறைகள் திருப்தி கரமாக இருக்கவில்லை எனத் தீவிரமாகக் குரல் கொடுத்தவர்.

ஐக்கிய பழமைவாதக்கட்சித் தலைவர் தெரிவிற்கு வாக்கு அளிக்கத் தகுதியான 124,000 பேரில் 84,593 பேரே (68.2%) தமது வாக்குகளை அளித்திருந்தனர் எனக் கட்சித்தலைவரைத் தெரிவு செய்ய அமைக்கப்பட்ட தேர்தல் குழுவின் பிரதம அதிகாரியான Rick Orman ஊடகங் களுக்குத் தெரிவித்திருந்தார்.

இம்முறை கட்சித்தலைவரைத் தெரிவு செய்ய, அதாவது ஒருவர் 50%இற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற, தேர்தலில் மிகக் குறைந்த வீத வாக்குகளைப் பெற்றவரை நீக்கித் திரும்பத் திரும்ப எண்ணுவது ஆறுமுறை நடைபெற்றது.

முதன்முறை வாக்குகள் எண்ணப்பட்ட போது ஒருவரும் 50%இற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிராதபடியால் குறைந்த வாக்குகளைப் பெற்ற Leela Aheer நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகளின் இரண்டாவது விருப்பு வாக்குகளைப் பெற்றவருக்கு அவ்வாக்கு கள் அளிக்கப்பட்டு இரண்டாம் முறை வாக்குகள் எண்ணப்பட்டன. அப்போதும் ஒருவரும் 50%இற்கு மேற்பட்ட வாக்கு களைப் பெறாதபடியால் ஆகக்குறைந்த வாக்குகளைப் (2.7%) பெற்ற Rajan Sawhney நீக்கப்பட்டு அவருக்கு

(தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)



























# அல்பேட்டா...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விழுந்த வாக்குகளின் அடுத்த விருப்பு வாக்குகளைப் பெற்றவருக்கு அவ்வாக்குகள் அளிக்கப்பட்டு மூன்றாம் முறை எண்ணப்பட்டன.



Clockwise from top left: Leela Aheer, Brian Jean, Todd Loewen, Travis Toews, Danielle Smith, Rebecca Schulz and Rajan Sawhney.

அதில் குறைந்த வாக்குகளைப் பெற்ற Todd Loewen நீக்கப்பட்டு (7.8%) நான்காம் முறை எண்ணப்பட்டது. அதில் குறைந்த வாக்குகளைப் பெற்ற Rebecca Schulz (8.4%) நீக்கப்பட்டு ஐந்தாம் முறை எண்ணப்பட்டது. அதிலும் ஒருவரும் 50%இற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறாதபடியால் அதிகுறைந்த வாக்குகளைப் பெற்ற Brian Jean (14.8%) நீக்கப்பட்டு ஆறாவது முறையாக வாக்குகள் எண்ணப்பட்டன. தற்போது மீதமாக இருந்த Danielle Smithஇற்கும் Trais Toews இடையே கட்சித்தலைவருக்கான போட்டியிருந்தது. ஆறாவது முறையாக எண்ணப்பட்ட முடிவுகளின்படி Danielle Smith - 53.77% வாக்குகளையும் Travis Toews - 46.23% வாக்குகளையும் பெற்றனர்.

53.77%ஆன வாக்குகளைப் பெற்ற Danielle Smith அல்பேட்டாவின் 19ஆவது முதல்வராக ஐக்கிய பழமைவாதக்கட்சியின் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டார்.

ஒக்ரோபர் 11ஆம் திகதி Danielle Smith அல்பேட்டாவில் முதல்வராகப் பதவியேற்றார். அவர் 1971 ஏப்ரல் 1ஆம் திகதி கல்கரியில் பிறந்தவர். இவர் கல்கரி பல்கலைக்கழகத்தில் கலைத்துறை மற்றும் பொருளியலில் இளமானிப்பட்டம் பெற்றவர். இவர் பல்கலைக்கழகத்தில் இருக்கும்போது பழமைவாதக் கட்சியின் அரசியலில் ஈடுபட்டவர். மாகாண அரசியலில் 2009ஆம் ஆண்டில் இருந்து பங்குபற்றிவரும் டானியல், 2012இல் அல்பேட்டா சட்டசபைக்குத் தெரிவானார். 2015ஆம் ஆண்டில் சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகும்வரை Wildrose கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தார். தற்போது அவர் ஐக்கிய பழமைவாதக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தாலும் அவர் சட்டசபையில் உறுப்பினர் அல்ல.

அல்பேட்டா மாகாணத்தில் தற்போது “Calgary - Elbow” தொகுதியில் சட்டசபை உறுப்பினர் இல்லாவிட்டாலும் தான் அத்தொகுதியில் இடைத்தேர்தல் வைத்து அங்கு போட்டியிட விரும்பவில்லை என Danielle ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

Danielle Smith தனக்கு கிராமப்புறத்து மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவே விருப்பம் என்றபடியால் அவர் சட்டசபைக்குச் செல்ல வசதியாக Brook - Medicine தொகுதி சட்டசபை உறுப்பினர் ஒக்ரோபர் 08ஆம் திகதி பதவி விலகினார். Danielle



அத்தொகுதியில் இடைத்தேர்தலை வைத்து அதில் போட்டியிட உள்ளார். Brook - Medicine தொகுதியில் சட்டசபை உறுப்பினராக இருந்த Michaela Frey அத்தொகுதியில் 60%இற்கும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த அல்பேட்டா மாகாணத்தின் பொதுத்தேர்தல் 2023 மே இல் நடைபெற உள்ளது. அதுவரை Calgary - Elbow தொகுதி வெற்றிடமாகவே இருக்கும்.

Danielle Smithஇனுடைய அரசியல் கொள்கையில் முக்கியமானவை அல்பேட்டா மாகாணத்திற்கு மத்திய அரசில் இருந்து சுயஆட்சி கிடைக்கப் போராடுவது மற்றும் மத்திய அரசின் காபன் வரிக்கு எதிராகப் போராடுவது போன்றவையாகும். இவர் “Freedom

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கிளிநொச்சியில் இடம்பெற்ற பண்பாட்டுப் பெருவிழா!




கடந்த 10ஆம் திகதி கிளிநொச்சியில் பண்பாட்டுப் பெருவிழா சிறப்புற நடைபெற்றுள்ளது. கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பசுமைப் பூங்காவில் நடைபெற்ற இந்த விழாவில் சுமார் ஐயாயிரம் வரையிலான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.










கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலிருந்து மக்கள் இவ்விழாவிற்கு வந்து செல்ல விசேட போக்குவரத்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால், குடும்பங்களாக மக்கள் இவ்விழாவில் வந்து கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக, பிற்பகல் இரண்டு மணிக்கு கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் பண்பாட்டுப் பேரணியும் இடம்பெற்றது. தமிழர் பண்பாட்டுத் தொன்மை, கலை, கலாச்சாரம், வீரம், பாரம்பரியம், வீர விளையாட்டு, ஆடல், பாடல், கிராமியக் கூத்து, நாட்டியம் என்பனவற்றை பறை சாற்றும் வகையில் பேரணி இடம்பெற்றது. எல்லாளன், சங்கிலியன், பண்டார வன்னியன், பல்லவராயன் முதலான தமிழ் மன்னர்களை சித்தரிக்கும் ஊர்திகளும் இப்பேரணியில் இடம்பெற்றன. இப்பேரணி யில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

பேரணி பசுமைப் பூங்காவை அடைந்ததும் அலங்கரிக்கப்பட்ட பந்தலில் மக்கள் அமர்ந்து கலை நிகழ்வுகளை இரசித்தனர். நவீன மேடை அமைப்பில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

பண்பாட்டுக் குழுவின் தலைவர் அ. சத்தியானந்தன் வரவேற்புரையை நிகழ்த்த, கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ. வேழமாலிகிதன் தலைமை உரையை நிகழ்த்தினார். வாழ்த்துரையை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நிகழ்த்தினார். இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் சிறப்புரையை நிகழ்த்தினார்.

கிழக்கு மாகாணக் கலைஞர்களின் இராவணேசன் கூத்துருவ அளிக்கை, மலையகக் கலைஞர்களின் காமன் கூத்து, நடன ஆற்றுகை, கவியரங்கம், 'மண் குளித்து' கூத்து ஆற்றுகை, நாதஸ்வரச சங்கமம், தாயக கலைஞர்களின் அமுத கானங்கள் இசை நிகழ்வு, குறும்பட போட்டியில் முதலாம் இடத்தை வென்ற குறும்படம் திரையிடல் ஆகிய நிகழ்வுகளுடன் 15 சாதனையாளர்களுக்கு விருதுகளும் பொற்கிழியும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன.

விழாவில் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் சிற்றுண்டிப் பொதிகள் வழங்கப்பட்டன. இலைக்கஞ்சி, பால், சர்பத் போன்றவையும் வழங்கப்பட்டன. இடையிடையே மழை அச்சுறுத்தினாலும் விழா நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன.

இப்பண்பாட்டு நிகழ்வு குறித்து சிலரால் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக முகநூல் வழியாக இந்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை யிலேயே கரைச்சி பிரதேச சபை இயங்கு கின்ற படியினால் இந்தப் பண்பாட்டு விழாவிற்கு ஓர் அரசியல் சாயம் பூசப்படு வதை தவிர்க்க முடியாதுதான். வேறு கட்சிகளை சார்ந்தோரே விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பொதுமக்கள் வாழ்வாதார பாதிப்புகளை எதிர் கொண்டுள்ள நிலையில் இவ்வாறான விழாக்கள் தேவையா? அதுவும் வறுமைக் கோட்டிற்குள் வாழும் மக்கள் அதிகமுள்ள கிளிநொச்சி போன்ற பகுதியில் பெருமளவு பணத்தை செலவளித்து இவ்வாறான விழாக்களை நடத்த வேண்டுமா? இதற்கான பணம் எங்கிருந்து வந்தது என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. வணிகர்களிடமும், செல்வந்தர்களிடமும், புலம்பெயர் உறவுகளிமிருந்துமே இவ் விழாவிற்கான நிதி திரட்டப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

போர்க் காலத்தில் படையினரின் தாக்குதல் கள், குண்டு வீச்சுக்கள், மரணங்கள் எல்லாம் நாளாந்தம் நிகழ்ந்து கொண் டிருந்த வேளையிலும் கலை நிகழ்வுகள், கலை விழாக்கள், கருத்தரங்கங்கள், நூல் வெளியீடுகள், சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வுகள் யாவும் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தன. கலைநிகழ்வுகள் நடைபெறும் களத்திற்கு மேலாகவே குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிடும். அவ்வேளைகளில் கூட கலைந்து செல்லாமல் மக்கள் காத்திருந்து அவற்றை உள்வாங்கினர்.

அக்காலங்களில் இப்போது விமர்சிக்கும் தரப்பினர் எவரும் வாய் திறக்கவில்லை. போரிற்குள்ளும், இழப்புகளுக்குள்ளும் வறுமைக்குள்ளும், கலைகளும் பண்பாடும் வாழ்ந்தன. அவை பாதுகாக்கப்பட்டன.

இன்று நேரடியான போர் இல்லை. விமானங்கள் குண்டு வீசுவதில்லை. போரினால் ஏற்படும் மரணங்கள் இல்லை. ஆனால், வறுமை இருக்கின்றது. இளைஞர்களை போதைபொருள் ஆட் கொண்டு சீரழித்து வருகின்றது. அதனால் மரணங்களும் ஏற்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில், கலைகளே இளம் சமூகத்தினரின் கவனத்தை திசை மாற்றலாம் என நம்பிக்கை கொள்ளலாம்.

பண்பாட்டு விழாவை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட குறும்படப் போட்டிக்காக வந்த குறும்படங்களில் அதிகமானவை போதைப்பொருளால் சமூகம் எதிர் கொண்டுள்ள பாதிப்புகளை பேசுவதாகவே அமைந்திருந்தன. அந்தப் படங்களை இயக்கியவர்கள், நடித்தவர்கள் யாவரும் இளைஞர்கள்தாம் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

கடந்த இரு வருடங்களாக ஒரு பெரும் போர் போன்றே கொரோனா வைரஸ் மனிதரை ஆக்கிரமித்திருந்தது, இப்போது பொருளாதார நெருக்கடி ஆக்கிரமித்துள் ளது. தொடர்ந்து பல்வேறு நெருக்கடி களை மனித சமுதாயம் எதிர் கொள்கின்றது. எமது மண்ணில் மட்டுமன்றி உலகம் முழுவதும் இந்தப் பிரச்சினைகள் உள்ளன. இவை நடுவே மானுடத்தின் பண்பாட்டு அடையாளங்கள் கருகிப் போக இடமளிக்கக் கூடாது.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## அறிவோம்!



பச்சைப் பயறை வாங்கி வந்து அதனை இரவில் தண்ணீரில் ஊற வைத்து காலையில் தண்ணீரை வடித்து விட்டுவிடுங்கள். சுமார் 4 மணி நேரம் கழித்து பயறு முளை வந்திருக்கும்.

இதனைத்தான் முளை கட்டிய பயறு என்கிறோம். பொதுவாக பயறுக்கும், முளை கட்டிய பயறுக்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. என்னவென்றால், அதில் உள்ள சத்துக்கள்தான். எந்தத் தானியத்தையும் முளை வந்த பிறகு உண்பது உடலுக்கு அதிக சக்தியைக் கொடுக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. அதில் மிக முக்கிய இடம் வகிப்பது பயறுதான்.

- வேணி -

100 கிராம் முளை கட்டிய பயறில், 30 கலோரிகள்
3 கிராம் புரதச்சத்து 6 கிராம் கார்போஹைட்ரேட்
2 கிராம் நார்ச்சத்து உள்ளது.

அதிக உடல் உழைப்பும், உடல் பலமும் தேவைப்படுவோர் இந்த முளை கட்டிய பயறை உணவில் எடுத்துக் கொள்ளலாம். இது உடலுக்கு குளுமையைக் கொடுப்பதால் கோடை காலத்தில் குழந்தைகளுக்கும் செய்து கொடுக்கலாம்.

# மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்படுகின்றன

**- விகிர்தன் -**

இலங்கை அரசாங்கம் ஜனநாயகம் மற்றும், மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகளை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது என்பதை கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் உறுதிப்படுத்தியுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் உயிரிழந்தவர்களை காலி முகத்திடலில் அமைதியாக நினைவுகூர வந்திருந்தோர் மீது பொலிஸார் மிக மோசமாக நடந்துகொண்டனர். வந்திருந்தவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். இந்த நினைவுகூரல் நிகழ்விற்காகக் காலி முகத்திடலுக்குத் தங்களது பிள்ளைகளுடன் வந்திருந்தோரையும் பொலிஸார் கலைத்தனர். அவர்களைப் பிள்ளைகளுடன் இழுத்துச் சென்றனர்.

இச்சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஒரு வயதுக் குழந்தையொன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. குழந்தைக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இல்லை என வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தாலும், பொலிஸார் இழுத்துச் சென்றதில் குழந்தையின் பின்புறத்தில் அடிப்பட்டு நீல நிறமாகியிருப்பதாகக் குழந்தையின் தாய் தெரிவித்தார்.

அமைதிப் போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றிப் போராட்டத்தில் உயிரிழந்தோரை நினைவு கூர்வதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். எனினும், போராட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர். போராட்டக்காரர்கள் அதற்கு உடன்படாததால், அங்கு திரண்டிருந்த மக்களை அங்கிருந்து வெளியேற்றப் பொலிஸார் கடுமையாக நடந்து கொண்டனர். இந்த சம்பவத்தின் போது நால்வர் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. பொலிஸார் அங்கு நடந்துகொண்ட விதம் குறித்து கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது அதிகாரங்களை மீறும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. சட்டவிரோதமான உத்தரவின் பேரில் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்றாவது ஒரு நாள் தமது சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு விலை கொடுக்க வேண்டி வரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

காலிமுகத்திடலில் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின்போது கூட்டத்தைக் கலைக்க பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் உயிரிழந்தவர்களை அமைதியான முறையில் நினைவுகூர முயற்சித்தவர்களிடம் பொலிஸார் மோசமாக நடந்து கொண்ட சம்பவம் தொடர்பில் இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது. இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் பொலிஸாருக்கு எதிராக இந்த முறைப்பாட்டை செய்துள்ளது.

பிள்ளைகளுடன் காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தவர்களிடம் பொலிஸார் கடுமையாக நடந்து கொண்டு அவர்களது மனித உரிமைகளை மீறியுள்ளதாகவும் அச்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமைதிப் போராட்டத்தை பொலிஸார் கலைத்த விதம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. போராட்டக்காரர்கள் கலைக்கப்பட்டமைக்கான காரணங்களை விவரித்து 24 மணி நேரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்தது. ஆனால், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தில் பொறுப்புவாய்ந்த எவரும் இது குறித்து கருத்துத் தெரிவித்ததாகவோ, சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது நடவடிக்கை எடுத்ததாகவோ தெரியவில்லை.

இதேவேளை, போராட்டங்களில் குழந்தைகளை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்த வேண்டாம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பெற்றோரை வலியுறுத்தியுள்ளது. இவ்வாறான போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் பிள்ளைகளின் உயிரைப் பணயம் வைக்க வேண்டாம் என பெற்றோர் மற்றும் முதியவர்களிடம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால், சிறுவர்கள் தொடர்பில் பொலிஸார் கவனமாக நடந்துகொள்ள வேண்டும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிடவில்லை.

ஒரு கலகம் நடைபெறுகின்ற போது சிறுவர்கள், குழந்தைகளை அங்கு அழைத்துச் செல்லக் கூடாது என்பது உண்மைதான். ஆனால், இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகளுக்கு இறந்தவர்களின் உறவினர்கள் தங்கள் பிள்ளைகளுடன் செல்வதை தவறென்று சொல்ல முடியுமா? எனவே, அன்று காலி முகத்திடலில் பொலிஸார் நடந்துகொண்ட விதத்தை அரசாங்கத் தரப்பிலிருந்து யாரும் நியாயப்படுத்த முடியாது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை சர்வதேச நாடுகளிடமும், அமைப்புக்களிடமிருந்தும் உதவிகளை எதிர்பார்த்திருக்கும் நிலையில், மனித உரிமை விடயத்தில் இலங்கை காட்டும் அக்கறை தொடர்பில் சர்வதேச சமூகத்தினால் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இது இவ்வாறிருக்க, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணை 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இலங்கை அதனை நிராகரித்துள்ளது.

'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 51/ L.1 என்ற புதிய பிரேரணையையே இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்தப் பிரேரணை இலங்கையில் வடக்கையும் தெற்கையும் துருவப்படுத்தும் எனத் தெரிவித்துள்ள இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, இலங்கையின் இறையாண்மைக்கு முரணான இப்பிரேரணையை தாங்கள் நிராகரிப்பதாகப் பேரவையில் தெரிவித்தார். ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கம் சர்வதேச சகாக்களுடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

ஜனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி குறித்த முழுமையான - அனைவரையும் உள்வாங்கும் கலந்துரையாடல்களிற்கு ஆதரவளிப்போம் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த கால போர்க்குற்றம், மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை சர்வதேசம் இலங்கையிடம் எதிர்பார்க்கும் நிலையில், அவற்றை மறுதலித்து வருவதோடு தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதை இலங்கை அரசாங்கம் கண்டும் காணமலேயேதான் நடந்துகொள்கின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கை தற்போது எதிர்கொள்ளும் நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகளுக்குப் பெரும் தடையாகவே அமையும்.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# நாமும் நமது இல்லமும் 617



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடியர்கள் யாவரும் ஒருமித்ததாக நம்புவது, கனடாவில் ஆதனத்தின் எண்ணிக்கை போதாமை. கனடாவிற்குப் புதிதாக வந்துகொண்டு இருக்கும் குடிவரவாளர்கள் வாழ்வதற்கும், வாங்குவதற்கும் குறிப்பாக, ரொறொன்ரோ மற்றும் வன்கூவர் நகரங்களில் இத்தேவை அதிகமாகவே காணப்படுகின்றது. கனடியரோயல் வங்கியின் கருத்தின்படி இந்த ஆண்டு (2022), 2023 மற்றும் 2024களில் குறைந்தது 240,000 ஆதனங்கள் தேவைப்படலாம் எனக் கருதலாம். கடந்த சில வருடங்களில் வருடம் 200,000 ஆதனங்கள் உருவாக்கப்பட்டன. இப்பெறுமதி 240,000இற்கு அதிகரிக்கப்பட்டாலும், ஏற்கனவே காணப்படும் குறைப்பாட்டை (shortage) நீக்க மேலதிகமாக ஆதனங்கள் நிர்மாணிக்க வேண்டியதாக உள்ளது.



கனடிய ஆதன காப்புறுதி CMHC (Canada Mortgage and Housing Corporation)இன் கருத்தின்படி இன்றைய ஆதன நெருக்கடியை நீக்க குறைந்தது 400,000 ஆதனங்கள் வருடத்திற்கு நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

2021இல் ஆகக்கூடியதாக 272,000 ஆதனங்கள் நிர்மாணிக்கத் தொடங்கப்பட்டது. இப்பெறுமதி 1970இலிருந்து ஆகக்கூடிய எண்ணிக்கை ஆகும். எனினும் அண்மைக்காலங்களில் கனடாவில் ஏற்பட்ட மக்கள்தொகை அதிகரிப்பால், இந்த எண்ணிக்கை போதியதாக இல்லை. 1970இல் கனடிய மக்கள் தொகை 20 மில்லியனிற்கு சற்று அதிகமாகக் காணப்பட்டது. ஆனால், இன்று 38 மில்லியனை தாண்டியுள்ளது. எனவே அதிக நிர்மாணம் தேவை. இப்பொழுது கனடிய மக்களின் பிறப்பு வீதம் குறைந்தாலும், புதிய குடிவரவாளர்களின் வருகையாலும், கனடிய மக்கள் நீண்ட காலம் வாழ்வதாலும் மேலதிக வீடு, மனை தேவை என்பதில் சகலரும் ஏற்றுகொண்ட உண்மை.

உதாரணமாக 1940களில் கனடிய ஒரு குடும்பத்தில் மொத்தமாகக் காணப்பட்டவர்கள் 4.3 மக்கள், 1981இல் இந்த எண்ணிக்கை 3இற்கு சற்று குறைவாகவும் இன்று மேலும் குறைந்து 2.4 ஆகவும் காணப்படுகின்றது. மேலும் 1980களில் 100பேரிற்கு 33 வீடு, மனை தேவைப்பட்டது. இதே நிலைமையில் இன்று 100 மக்களிற்கு 40இற்கு சற்று அதிகமான ஆதனங்கள் தேவைப்படுகின்றது. 2016இல் ஏறக்குறைய 100,000 வீடு/மனைகள், மக்களின் தேவையைவிடக் குறைவாகக் காணப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இப்பொழுதும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது.

## SEPTEMBER 2022 - GTA HOUSING MARKET STATS - BY REGION

| | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price: | **$1,061,876** | **$1,246,490** | **$915,027** | **$1,044,385** | **$1,231,803** |
| Total # New Listings | 4,493 | 1,848 | 1,194 | 1,992 | 1,204 |
| Total # Sales | 1,744 | 927 | 662 | 936 | 557 |
| Avg. Listing Days On Market (LDOM) | 22 | 23 | 18 | 24 | 24 |
| YTD Increase | **11%** | **12%** | **16%** | **15%** | **14%** |
| **HOUSE TYPES & AVERAGE SALE PRICE** | | | | | |
| Detached | $1,585,589 | $1,527,795 | $1,002,111 | $1,319,828 | $1,571,185 |
| Semi-Detached | $1,210,715 | $1,039,600 | $761,625 | $968,063 | $1,061,547 |
| Townhouse | $1,193,557 | $1,089,171 | $805,082 | $905,022 | $996,562 |
| Condo Apt | $769,058 | $695,455 | $573,515 | $626,851 | $667,978 |

**Prepared By: Sivage Sivagumaran BROKER CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS lSource: TRREB Data As of, Oct/11/2022**

மேலும், அண்மைக்காலங்களில் ஏற்பட்ட தொழிலாளர்களின் பற்றாக்குறை, நிர்மாணப்பொருட்களின் அதிகமான விலை அதிகரிப்பு, பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்கால் 2016 இலிருந்து 2021ஆம் ஆண்டுவரை சராசரியாக 221,000 ஆதனங்கள் நிர்மாணிக்கத் தொடங்கப்பட்ட போதும் 200,000வரையான ஆதனங்களே கட்டி முடிக்கப்பட்டு மக்களிற்கு வழங்கப்பட்டது. அதே நேரத்தில் ஆண்டு 2015இல் 260,000 என்றளவில் புதியவர்களை கனடா உள்வாங்கியது. இன்று, இந்த எண்ணிக்கை 400,000இற்கு மேலாகக் காணப்படுகின்றது.

வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது கனடாவின் உள்கொள்ளும் புதிய வரவாளர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டு மடங்காகும்.

இந்நிலையில் எவ்வளவு புதிய ஆதனங்கள் நிச்சயமாகத் தேவை என்பதனை அறுதியிட்டுக் கூறமுடியாது. எனினும் மிகப்பெரிய பற்றாக்குறை என்பது யாவரும் ஒத்துகொள்வது. அதிக விலை கொடுத்து ஆதனம் வாங்குவதும், மக்களுக்குப் பண நெருக்கடியை கொடுக்கும். இதனால் சராசரி விலை நியாயமாக இருத்தல் வேண்டும். இதற்காக ரொறொன்ரோ, வன்கூவர் போன்ற நகரங்களில் விலைகள் குறைய வேண்டும். அல்லது மொத்த வருமானத்தின் 40%வரை ஆதனம் சம்பந்தமான மொத்த செலவிற்கு செலுத்தக் கூடிய நிலமை இருத்தல் வேண்டும்.

இந்த 40% என்ற மொத்த வருமான, செலவை ஆதனத்திற்கு செலுத்த 2022இலிருந்து 2030 வரையான காலப்பகுதியில் குறைந்தது 2.3 மில்லியன் ஆதனங்கள் நிர்மாணம் செய்தல் வேண்டும்.

இதனை இலகுவாக கூறுவதென்றால் இன்று நிர்மாணிப்பதனைவிட ஏறக்குறைய இருமடங்காக அதிகரிக்க வேண்டும்.

இதனை எவ்வாறு சாத்தியமாக்கலாம். தன்னியக்க இயந்திரங்களின் (Robot) பாவனை, வேறு இடத்தில், (Buildingகளில்) ஏற்கனவே ஆதனத்தின் முக்கிய பாகங்கள் நிர்மாணம் செய்யப்பட்டு கட்டப்படும் இடத்திற்குக் கொண்டு சென்று கட்டி முடித்தல், உள்ளூராட்சிகள், மாகாணங்கள் தமது ஆதனத்திற்கு வழங்கும் அனுமதி கொடுக்கும் முறையிலுள்ள இறுக்கமான கொள்கைகளை இலகுவாக்குதல் வேண்டும். ஆதனத்திற்காக அரசுகளுக்குக் கொடுக்கப்படும் செலவுகள் கணிசமாகக் குறைக்கப்படல் வேண்டும். இவை ஆதனம் கட்டி முடிப்பதற்குரிய சகல முன்னேற்பாடுகளையும் மூன்று அரசுகளும் கொடுத்து உதவ வேண்டும். எல்லாம் எவ்வாறு சாத்தியம்?

## பயணங்கள்



அன்னையின் மடியில் ஆரம்பப் பயணம்
தந்தையின் கரம்பிடித்து தளிர்நடைப் பயணம்
மூன்று வயதில் துவங்கும் கல்விப் பயணம்
ஆசிரியர் துணையுடன் அறிவுப் பயணம்

பள்ளிப்பருவம் முடிந்து கல்லூரிப் பயணம்
எதிர்காலத்தை அதுவே நிர்ணயிக்கும் பயணம்
அடுத்து துவங்கிடும் அலுவல் பயணம்
பணம் சம்பாதிக்கும் சாகசப் பயணம்

இருபத்தைந்திற்கு மேல் இல்லறப் பயணம்
துணையுடன் துவங்கிடும் நல்லறப் பயணம்
வருங்காலத்திற்கு வசதிகள் சேர்க்கவும்
அறுபது கடந்ததும் அமைதியாய் வாழவும்
வியர்வை சிந்தியும், விவேகமாய் சிந்தித்தும்
உழைப்பை நல்கி உயர்ந்திடும் பயணம்

சந்ததி பெருக்கிடும் சந்தோஷப் பயணம்
அவர்களை வளர்க்கும் ஆனந்தப் பயணம்
பிள்ளைகளுக்கு இல்லறம் அமைத்திடும் பயணம்
பேரக்குழந்தைகளுடன் பேரின்பப் பயணம்

பெற்றோர், உற்றோர் என உறவுகளுடன் பயணம்
நண்பர்கள் துணையுடன் நல்லதோர் பயணம்
பணி ஓய்வு பெறும்வரை உழைத்திடும் பயணம்
இனிமையாய் ஓய்வினை கழித்திடும் பயணம்

பிறந்தவர் பயணம் இறப்பினில் முடியும்
பாதையில் ஆயிரம் பயணியர் வருவார்
பாதியில் பலரும் பாதை மாறுவார்
இறுதிவரையில் உடன் வருவார் எவருளர்

முதலும் தெரியாது, முடிவும் தெரியாது .
இடையினில் சிலகால வாழ்க்கைப் பயணத்தில்
இனியது பேசி, இனியன செய்து
இயன்ற வரையில் உதவிகள் செய்து
இந்தப் பயணம் முடிவுற்றாலும்,
இறந்தும் வாழ்வோம் பலரது மனதில்

சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்

# MORTGAGE FINANCIAL

## SUBRA MORTGAGE SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- VACANT LAND
- CONSTRUCTION

***5 YEARS VARIABLE CLOSED***

| Loan Amount | Biweekly Payment |
|---|---|
| $755,460.00 | $1,177.78 |

***5 YEARS FIXED***

| Loan Amount | Biweekly Payment |
|---|---|
| $755,460.00 | $1,200.90 |




• 1st, 2nd & 3rd Mortgages • Purchase • Refinance
• Renewal • Switches • Equity lind of Credit • Pre-approvals
• Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660.5656
Fax: 647451.3099
Toll: 1-844-678.2721

Unit #406, 1585 Markham Rd,
Toronto, M1B 2W1

www.subra.com

**WE DEAL WITH ALL BANKS**

Brokerage #10530

Powered by

MORTGAGE ALLIANCE · Scotiabank · radius financial · EQUITABLE BANK · RMG mortgages · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · HOME TRUST · MCAP

# நானிலம் போற்றும் நட்பு - 8



- அகணி -
authorakani@gmail.com

திருவள்ளுவர் குறள் 788

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு”

என்ற குறளுக்கு “உடைநெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக்காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு” என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார். “ஆடை அவிழும்போது உடனே அதனைப் பிடிக்கும் கையைப் போல, நண்பனுக்குத் துன்பம் வரும்போது உடனே அதனைப் போக்குவதுதான் நட்பு” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார். “ஆடையிழந்தவன் கைபோல் தாமே முன் சென்று துன்பத்தை நீக்குவதே நட்பாகும்.” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார். நண்பனுக்குத் துன்பம் வரும்பொழுது துணையாக நண்பன் முன்வர வேண்டும் என்ற விடயத்தை இந்தக் குறள் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

சங்கம் மருவிய காலத்தில் பல சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் நட்பு பற்றிக் கூறும் கருத்துக்களையும் ஆராய்வோம். நாலடியார் பொருட்பாலில் அதிகாரம் 22 நட்பாராய்தலில் நாலடியார் பாடல் 213இனைக் கவனிப்போம்.

யானை யானையவர் நண்பொரி நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்-யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்
எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

இந்தப் பாடலுக்கு ஊ. புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

யானை அனையவர் நண்பு - யானை போன்றவர்களுடைய நேசத்தை, ஒரீஇ - விட்டு, நாய் அனையார் கேண்மை - நாய் போன்றவர்களுடைய சிநேகத்தை, கெழீஇ கொளல் வேண்டும் - சேர்த்துக் கொள்வது ஆவசியகம் (ஏனெனில்) யானை - அறிந்து அறிந்தும் - பலதரம் அறிந்திருந்தும், பாகனையே கொல்லும் - (தனக்கு உணவு கொடுத்துக் காக்கிற) பாகனையே கொல்கின்றது. எறிந்த வேல் - (தன்னையுடையவன்) பிரயோகித்த ஆயுதமானது, மெய்யது ஆ - தன் உடலில் பொத்ததாயிருக்கவும், நாய் -, வால் குழைக்கும் - வாலையாட்டும்.

பாகனையே - இங்கு ஏகாரம் சிறப்புப் பொருளில் வந்ததாகக் கொளல் வேண்டும். மெய்யது - குறிப்பு வினையாலணையும் பெயர், சினையடியாப்பிறந்த பெயர் என்பது நேர்.

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

“யானையைப் போன்றவர்கள் நட்பை விட்டுவிட வேண்டும். நாயைப் போன்றவர்களிடமே நட்புக் கொள்ள வேண்டும். யானை நன்கு தெரிந்த பாகனைக்கூட மதம் பிடித்த நிலையில் கொன்றுவிடும் நாயோ தன்னை வளர்த்துச் சோறிட்டவர் தன்மீது வேலெடுத்து வீசினாலும் அதற்காக வருந்தாமல் வாலாட்டி நன்றி பாராட்டும்.”




இந்தப் பாடலில் நண்பர்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்துப் பதிந்துள்ளது.

நாலடியார் பொருட்பாலில் அதிகாரம் 22 நட்பாராய்தல் இல் நாலடியார் பாடல் 214 இனைக் கவனிப்போம்.

பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோடு ஒட்டார் -
பலநாளும்
நீத்தார் எனக்கை விடலுண்டோ,
தம்நெஞ்சத்து
யாத்தாரோடு யாத்த தொடர்பு.

இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

“பல நாளும் - எந்நாளும், பக்கத்தார் ஆயினும் - அருகிலிருப்பவரானாலும், நெஞ்சில் - மனதில், சில நாளும் - சொற்ப தினங்களாகிலும், ஒட்டாரோடு - பொருந்தாதவர்களோடு, ஒட்டார் - சேரமாட்டார்கள். (புத்திசாலிகள்), தம் நெஞ்சத்து - தமது மனசிலே, யாத்தாரோடு - சேர்க்கப்பட்டவர்களோடு, ஐபொருந்தினவர்களோடு என்றபடி, யாத்த தொடர்பு - சேர்த்த சிநேகத்தை, பல நாளும் நீத்தார் என - பலகாலமும் (தம்மை) விட்டிருப்பவரென்று, கை விடல் உண்டோ - விட்டுவிடுவது இருக்குமா இல்லை.

மனம் பொருந்தாதவர் எத்தனை காலம் கிட்ட விருந்தாலும் அவரை யோக்கியர் நேசிக்கமாட்டார். மனம் பொருந்தினவர் எவ்வளவுகாலம் விட்டிருந்தாலும் அவர் சிநேகத்தைக் கைவிடமாட்டார்கள் என்பது கருத்து.”

நீத்தார் - நீ - பகுதி, ஆர் - விகுதி, தகரங்கள் சந்தியும் இடைநிலையும். யாத்தார் - யா - பகுதி, மற்றவை முன் போல்.”

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

“பல காலம் நெருக்கமாக இருந்தவர்கள் ஆனாலும், உள்ளன்பு இல்லாதவர்களுடன் பெரியோர் நட்பாக இருக்க மாட்டார்கள். ஆனால் தம்மைப் பிரிந்து சென்று வெகுநாள் ஆகியிருந்தாலும் தம்மோடு ஒத்த நல்லியல்பு உடையவர் நேசத்தை விட்டுவிட மாட்டார்கள்.

நண்பர்கள் உள்ளன்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து இந்தப் பாடலில் பதிந்துள்ளது.

நட்பு என்பது அறநூல்களாகிய பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் மிகவும் முக்கியமான விடயமாகக் கருதப்பட்டுள்ளது. அதனாலேயே திருக்குறளில் பல அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது. நட்பு என்பது எவ்வளவு உன்னதமான உறவு என்பது இதிலிருந்து புலனாகின்றது. இவ்வுலகில் நட்பினால் உயர்ந்தவர்கள் பலர் என்பதைப் பல பெரியோர்களின் சுயசரிதைகள் மூலமும் அறிந்துகொள்ள முடிகிறது.

நட்பின் மகிமையை எடுத்துக் கூறுவதற்குப் பல நீதிக் கதைகளும் உள்ளன. அண்மையில் இணையத் தளத்தில் படித்த ஒரு நீதிக்கதையை இங்கு பதிவிடுகிறேன்.

“ஒரு நாட்டின் அரசரிடம் யானை ஒன்று இருந்தது. அது எப்பொழுதும் ஏதாவது சேட்டை செய்துகொண்டு இருக்கும். ஒரு நாள் சேவகர்கள் அந்த யானைக்கு சாப்பாடு கொடுக்கும்போது அந்த யானை அதை சாப்பிடாமல் அழுது கொண்டே இருந்தது.

“இந்த யானைக்கு என்னதான் ஆச்சு இன்றைக்கு குளிக்கவும் இல்லை சாப்பிடவும் இல்லை அழுது கொண்டே இருக்கிறது” என்று சேவகர்கள் தங்களிடையே பேசிக்கொண்டு இருந்தனர். அவர்கள் அரசனிடம் சென்று, “அரசே யானை இன்று குளிக்கவும் இல்லை, சாப்பிடவும் இல்லை எப்போ பார்த்தாலும் அழுது கொண்டே இருக்கிறது. அதற்கு உடல்நிலை சரியில்லாமல் போய் இருக்குமோ” என்று எங்களுக்கு சந்தேகமாக உள்ளது என்று கூறினார்கள்.

உடனே அரசர், அமைச்சரிடம் என்ன பிரச்சனை என்று சென்று பார்க்குமாறு கட்டளையிட்டார். அமைச்சரும் யானையுடன் சென்று, “உனக்கு என்ன ஆச்சு ஏன் சோகமாக இருக்கிறாய்” என்று கேட்டார். அதற்கு யானை எந்த பதிலும் கூறாமல் அழுது கொண்டே இருந்தது. அப்போது அமைச்சர் சேவகர்களிடம், “இந்த யானையின் தினசரி வாழ்க்கை முறையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா” என்று கேட்டார். அதற்கு சேவகர்கள் அப்படி எல்லாம் இல்லை என்று பதிலளித்தனர்.

ஆனால் கொஞ்ச நாட்களுக்கு முன்பு நாய்க்குட்டி ஒன்று இந்த யானையிடம் மிகவும் நட்பாகப் பழகியது. அதை இந்த ஊரில் உள்ள ஒருவர் பார்த்துக்கொண்டு அந்த நாய் குட்டியை விலைக்கு கேட்டார், நாங்களும் அவரிடம் அந்த நாய்க் குட்டியை விற்றுவிட்டோம் என்று கூறினார்கள். அமைச்சர் தான் கேட்டவற்றை அரசரிடம் சென்று கூறினார். அமைச்சர், அரசரிடம் “அந்த நாய்க்குட்டி மீண்டும் திரும்பி வந்தால், இந்த யானை பழையபடி மாறிவிடும்” என்று கூறினார். அப்போது அரசர் அந்த நாய்க்குட்டியை கொண்டு வருமாறு கட்டளையிட்டார். சேவகர்கள் ஊர் மக்களிடம் சென்று அரசர் கட்டளை பிறப்பித்துள்ளதைக் கூறினார்கள்.

“யார் அந்த நாய்க்குட்டியை கொண்டு சென்றார்களோ அவர்கள் இன்றைக்கு அந்த நாய்க்குட்டியை மீண்டும் அரசரிடம் கொண்டு ஒப்படைக்க வேண்டும், இல்லை என்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்று சொன்னார்கள்.

இதைக் கேட்ட அந்த நபர் அந்த நாய்க் குட்டியை மீண்டும் கொண்டுவந்து அரசவையில் ஒப்படைத்தார். அந்த நாய்க்குட்டியை பார்த்த யானை மிகவும் மகிழ்ச்சி அடைந்தது மீண்டும் அந்த யானையும் நாய்க்குட்டியும் நண்பர்களாகவே இருந்தனர்.” இந்த நீதிக்கதை நட்பின் பெருமையை எடுத்துக் கூறுகிறது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# ‘சின்னக்கவுண்டர்’ ரஜினிக்காக எழுதிய கதை!

## நேர்காணல் - ஆர் செல்வராஜ்

## நேர்கண்டவர் - கண்ணன்

தமிழ் திரையுலகில், 55 ஆண்டுகளைக் கடந்து பயணிப்பவர், ஆர். செல்வராஜ். 230 திரைக்கதைகளுக்கு சொந்தக்காரர். இதில் பாதிக்கு மேல் வெற்றிப் படங்கள். இத்தனை வெற்றிகள் கொடுத்த இன்னொரு திரைக்கதை ஆசிரியர் தமிழில் கிடையாது. ஆர். செல்வராஜை, சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

**தமிழ் திரையுலகில் ஒரு கூட்டணி வெற்றி பெற்றுவிட்டால் சுலபத்தில் அதனை விட மாட்டார்கள். ஆனால், ‘அன்னக்கிளி’ கூட்டணி அப்படி தொடர்ந்து படம் செய்தமாதிரி தெரியவில்லையே, என்ன காரணம்?**

உண்மைதான். எங்கள் கூட்டணியை கலையவிடவில்லை. ‘அன்னக்கிளி’ படத்துக்குப் பிறகு ‘கவிக்குயில்’ என்று நாங்கள் ஒரு படம் பண்ணினோம். தயாரிப்பாளர் பஞ்சு அருணாசலம் சார் தேவராஜ் - மோகன் இயக்கம். நாட்டுப்புற இசைக் கலைஞரைப் பற்றிய கதை. ‘அன்னக்கிளி’ பெயரை வைத்துக்கொண்டு அவசரம் அவசரமாகப் படப்பிடிப்பு நடத்தி, பெரிய அளவில் வியாபாரம் செய்து, படத்தை வெளியிட்டால் ‘பிளாப்’ ஆகி விட்டது. அதற்குப் பிறகும் தேவராஜ் _ மோகன் நிறைய படங்கள் பண்ணினார்கள். ஆனால், பெரிய அளவில் வெற்றி பெறவில்லை. சிவக்குமாரின் ‘ரோஜாப்பூ ரவிக்கைகாரி’ மட்டும்தான் வெற்றிப்பெற்றது.

ஜவுளிக்கடையில் நம் அளவுக்குத் தேவையான துணியை எடுத்துட்டு வந்தபிறகு, மீதித் துணியை கடைக்காரர்கள் சுற்றி வைப்பது போல, கதையை ஒருவர் சரியாக எடுக்காவிட்டால் சில மாற்றங்களுடன் வேறு ஒருவருக்கு அதைக் கொடுத்திட வேண்டும் என்பது என் எண்ணம். அப்படி ‘கவிக்குயில்’ கதையை ஆண், பெண் கதாபாத்திரங்களின் தன்மையில் உள்ள இசைவை லேசாக மாற்றி பாரதி ராஜாவிடம் கொடுத்தேன். அதுதான் ‘கிழக்கே போகும் ரயில்’.

‘கிழக்கே போகும் ரயில்’ படத்தின் ‘கிளைமாக்ஸ்’ காட்சியை அட்லாண்டிக் ஹோட்டலில் வைத்து பேசி முடிவு செய்கிறோம். மறுநாள் படப்பிடிப்பு. எனவே, உடனே எல்லோரும் கிளம்பி விட்டனர். நான் அவர்களை வழியனுப்பி வைத்து விட்டு, அறைக்குத் திரும்பி ஒரு புத்தகம் எடுத்துப் படித்துக் கொண்டிருந்தேன். அந்தப் புத்தகத்தில் ஒரு கதை. மக்கள் மீது பிரான்ஸ் மன்னர் நிறைய வரி போடுகிறார். இந்த வரி விதிப்பால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனைப் பார்த்து மனம் வருந்தும் ராணி, மன்னரிடம் வரியைக் குறைக்கச் சொல்லி வேண்டுகிறார். மன்னரோ, ‘நீ மக்களை நம்பாதே, அவர்கள் மோசமானவர்கள்’ என்று சொல்கிறார். ராணி தொடர்ந்து வரியைக் குறைக்கும்படி வேண்டுகிறார்.

கடைசியில் ராஜா, “இந்த ஜனங்களில் ஒருவரை நிர்வாணமாக நடந்து வரச் சொல். அப்படி நடந்து வந்தால் நான் வரியை குறைத்துவிடுகிறேன்” என்கிறார்.



ராணியே நிர்வாணமாக நடந்து வருகிறார். நமக்காக ராணி நிர்வாணமாக வருகிறார் என்பதை அறிந்ததும், ஊரில் உள்ள ஆண்களை அவரவர்கள் வீட்டுப் பெண்கள் கட்டிப்போட்டு விடுகிறார்கள். அப்போது ஒருவன், ராணியைப் பார்க்க முற்படுகிறான். அவனின் மனைவி அவன் கண்ணை சுட்டுவிடுகிறாள்.

இந்தக் கதை என்னை பாதித்தது. உடனே, ‘கிழக்கே போகும் ரயில்’ கிளைமாக்ஸில் ஒரு மாற்றம் செய்யலாம் எனத் தோன்றியது. பாரதிராஜாவை போனில் கூப்பிட்டேன். அவர் கிளைமாக்ஸ் படப்பிடிப்பு அவசரத்தில் இருந்தார். ஆனாலும் செல்வராஜ் விஷயம் இல்லாமல் கூப்பிட மாட்டானே என்று லைனில் வந்தார். சற்று முன்னர் நான் படித்த பிரான்ஸ் இளவரசி கதையை வைத்து உருவாக்கிய புதிய கிளைமாக்ஸை சொன்னேன். ‘ஊரிலே மழையே பெய்யலை. பாஞ்சாலியைதான் நிர்வாணமாக வரச் சொல்றாங்க. கடைசியாக ஊருக்கு வருகிற ரயிலின் கடைசிப் பெட்டியில் செய்தியை எழுதி அனுப்புவாங்க. அன்றைக்கு எழுதி அனுப்பிய செய்தி அழிந்துவிடுகிறது, ஏனெனில் மழைபெய்து கொண்டிருக்கிறது. அவளோ நிர்வாணமாக நடந்து வர வேண்டிய சூழ்நிலை. அந்நிலையில் அவளைத் தூக்கிக்கொண்டு ரயிலில் வேகமாக ஏறுகிறான்.’ இதைக் கேட்டவுடன் பாரதிராஜா துள்ளிக் குதித்துக்கொண்டு ‘சூட்டிங் கேன்சல்’ என்று கத்துவது எனக்குக் கேட்டது. அன்றைக்கு நான் அந்த கிளைமாக்ஸை சொல்லவில்லை என்றால், கிளைமாக்ஸ் எடுத்து முடித்திருப்பார்கள். வேறு கிளைமாக்ஸோடு படம் வெளிவந்திருக்கும். ‘கிழக்கே போகும் ரயில்’ வருடக் கணக்கில் ஓடியது.

**விஜயகாந்த் நடித்த ‘சின்னக்கவுண்டர்’ கதையை நீங்கள் முதலில் ரஜினிக்காகத் தான் எழுதினீர்கள் என்று அறிந்தோம் அது உண்மையா?**

நேர்காணலுக்கான ஒரு தயாரிப்போடு, நிறைய தகவல்களைச் சேகரித்துக் கொண்டுதான் வந்திருக்கிறீர்கள், போலிருக்கிறது. நல்ல விஷயம்தான். ‘சின்னக் கவுண்டர்’ ரஜினிக்காக எழுதிய கதை தான். பாரதிராஜா இயக்கத்தில் ரஜினி நடிப்பதாக இருந்தது. அதற்காக இக் கதையை தயார் செய்தேன். அப்போது ரஜினியிடம் தேவராஜ் என்பவர், ‘பாரதி ராஜா ‘முதல் மரியாதை’ பண்ணி பெரிய இடத்துக்கு போயிட்டார். அடுத்து உங்களை வைத்து ஒரு படம் பண்ணினால் இன்னும் மேலே போயிடுவார். ஆனால், நீங்க கிராமத்து கதை செய்வது உங்களுக்கு நல்லதில்லை. எனவே, நீங்கள் ஒப்புக்கொள்ளாதீர்கள்” என்று சொல்லிவிட்டார். எனவே, ரஜினியும், கிராமத்துக் கதை வேண்டாம் என்று சொல்லிவிட்டார். எனவே, பாரதிராஜாவும் என்னிடம் கதையே கேட்கவில்லை. இதனால், ‘சின்னக்கவுண்டர்’ கதை பாரதி ராஜாவுக்கும் தெரியாது. இந்தக் கதையை ரஜினி பண்ணியிருந்தால் இன்னும் பிரமாண்டமாகப் போயிருந்திருக்கும். ரஜினி, கிராமத்துக் கதை வேண்டாம் என்று சொல்லிவிட்டதால் நகரப் பின்னணியில் ‘கொடி பறக்குது’ எடுத்தார்கள்.

அப்போது நான் பம்பாயில் ஒரு படம் எடுக்கப் போய்விட்டேன். அந்தப் படத்தின் கதை, வசனம் நான். அந்தப் படம் பம்பாயிலே கலவரம் பண்ணிடுச்சு. பால் தாக்கரே, மண்ணின் மைந்தர்களுக்கு வேலை வேண்டும் என்பதற்காக, பம்பாயில் இருக்கும் தமிழர்கள், மலையாளிகளை விரட்டிய பிரச்சினையை அடிப்படை யாகக் கொண்ட கதை.

ஒரு மலையாளக் குடும்பம் கணவன், மனைவி, இரண்டு பையன்கள். ஒரு பையனுக்கு நான்கு வயது, இன்னொன்று பச்சைக் குழந்தை. பம்பாய் கலவரத்தில் நொடிந்து போய் ரயிலில் கேரளாவுக்குத் திரும்புகின்றனர். கையில் சுத்தமாக காசு கிடையாது. அவர்கள் ரயிலில் வந்து கொண்டிருந்தபோது, ஏதாவது விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். குழந்தைகள் ஏக்கத்தோடு அம்மாவையும் அப்பாவையும் பார்த்துக்கொள்கின்றனர். குழந்தைகளுக்கு ஏதாவது வாங்கிக்கொடுக்க அவர்களிடம் காசு கிடையாது. இரவு நேரம் செல்லச் செல்ல, அழுது அழுது ஓய்ந்த பச்சைக் குழந்தை பசி தாங்க முடியாமல் செத்து விடுகிறது. இறந்த குழந்தையை எடுத்துக் கொண்டு இடையில் எங்க இறங்கினாலும் திரும்பவும் ஊர் போக டிக்கெட்டு எடுக்க காசு இல்லை. ஆனால், மறுநாள்தான் ஊர் போய் சேரமுடியும். எனவே, என்ன செய்வது என்று யோசித்துப் பார்த்து, ஏதாவது ஒரு பாலத்தின் மீது இரவு ரயில் போகும்போது, இறந்த குழந்தையை தூக்கிப் போட்டுவிட முடிவு செய்கிறார்கள். அப்படி அடுத்துவரும் பாலத்தில் செய்தும் விடுகிறார்கள். மறுநாள் காலை... கண் விழிக்கும் அம்மா ஓவென்று அழுகிறாள். என்ன என்று பார்த்தால் செத்துப்போன குழந்தை கையில் இருக்கிறது. தூங்கிக் கொண்டிருந்த, உயிரோடுள்ள குழந்தையைத் தூக்கி போட்டு விட்டிருக்கிறார்கள். இந்தக் கதையில் நூதன், அனுபவம்கெர் இருவரும் நடித்திருந்தார்கள். ஆர். செல்வராஜ் என்று என் பெயர் போடுகிற போது தியேட்டரில் அப்படி ஒரு கைதட்டு. இந்தச் சூழ்நிலையில்தான், சென்னையில் இருந்து பாரதிராஜா கூப்பிட்டார். ‘கொடி பறக்குது’ படம் அமிதாப்பச்சன் நடித்த ஓர் இந்திப் படத்தின் கதைதான். அதற்கு மணிவண்ணன் கதை, வசனம் எழுதியிருந்தார். ஏ.வி.எம்.இல் பத்து நாள் படப்பிடிப்பு முடிந்தபிறகும் செட் ஆகவில்லை. நான் சென்னை வந்தவுடன், ரஜினி என்னை பார்த்து, “கதையை கொஞ்சம் சரி பண்ணணும்” என்றார். நான், “பாரதி ராஜாவோடு வேலை செய்வது கஷ்டம். கடைசி வரைக்கும் நான் கூட இருக்க வேண்டும் என்பார். இப்போதைய சூழ்நிலையில், அவசரத்துக்கு என்னால் முடியாது. எனவே, சரியா வாராது” என்றேன். ஏனெனில், ரஜினியிடம் வாங்கிய தேதிகளுக்குள் படம் முடிக்கவேண்டும் என்பதே திட்டமாக இருந்தது.

